1986 நவம்பர் 14] [திரு. வி. பி. சிந்தன்]

ரிடம் முறையிடுவதற்குரிய இந்த உரிமையைக் கூட மின் வாரியத் தலைவர் பறிக்க முயற்சிக்கிறார். அது மட்டுமல்ல; கேள்விகளை எழுப்புகிற நேரத்தில், மின் வாரிய ஊழியர்கள் சம்பந்தமாக நான் கேள்விகளை எழுப்பியது உண்டு. அவைத் தலைவர் அவர்களுக்கும் தெரியும் என்று நினைக்கிறேன்.

** ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சம்பந்தப்பட்ட சர்க்குலர் பற்றி மட்டும் பேசுங்கள்.

திரு. வி. பி. சிந்தன்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது வேண்டாம். அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி ஆணையிடுகிறேன்.

இப்பிரச்சினை குறித்து மின் வாரியத் தலைவரிடமிருந்து விளக்கம் பெற்ற பின்பு நான் என்னுடைய தீர்ப்பை அளிக்க இருக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

4, அறிவிப்புகள்.

(அ) முதல் துணை மதிப்பீடுகள், 1986-87, அளித்தல் (ஆ. செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

1986–87 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகள் அறிக்கையைப் பேரவைக்கு அளிப்பதற்கு ஆளுநர் அவர்கள் 1986 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 17 ஆம் நாள் திங்கட்கிழமையைக் குறித்திருக்கிறார்கள்.

(ஆ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1980-81, அளித்தல் (ஆ. செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1980–81ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவைக்கு அளிப்பதற்கு ஆளுநர் அவர்கள் 1986 ஆம்ஆண்டு நவம்பர் திங்கள் 17 ஆம் நாள் திங்கட்கிழமையைக் குறித்துள்ளார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.